1994 மே 5]

540—

காட்டுமன்னார்கோயில் பெரிய வட்டம் கிராமத்தில் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்குதல்.

*19842—திரு. என். ஆர். ராஜேந்திரன் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்கோயில் வட்டம், குமராட்சி ஒன்றியம், மேலவள்ளியூர் - பெரிய வட்டம் கிராம குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் காட்டுமன்னார்கோயில் தாலுக்கா, குமராட்சி ஒன்றியம், மேலவள்ளியூர், பெரிய வட்டம் கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்து தர திட்டமிடப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. மின் இணைப்புப் பெறப்பட்டவுடன் திட்டம் செயல்படுத்தப்படும்.

திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு வந்த பிறகு இதுபோன்ற குக்கிராமங்களுக்குக் கூட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டு மக்களின் குடிநீர்ப் பிரச்சினைகள் தீர்வதோடு அரசின் சாதனைகளாய் அவை காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. இக்கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வழங்கியதற்கு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. சில இடங்களில் மின் இணைப்புகள் வழங்குவதில் மட்டும் சற்று தாமதம் ஏற்படுகிறது. ஆகவே, மின் கம்பங்கள் மற்றும் இணைப்பு வழங்குவது துரிதப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற இந்தத் திட்டத்தில் சுமார் 5 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அந்தப் பணிகள் எல்லாம் முடிவுற்று தயார் நிலையில் இருக்கிறது. குடிநீர் விநியோகத்திற்காக, இன்று மின் இணைப்புப் பெறுவதற்காக, மின்சார வாரியத்தை நாடுகின்ற நிலையில், இன்றைக்கு அந்த மின் இணைப்பைப் பெற உண்டான தொகை, அதற்குண்டான அந்த வைப்புத் தொகை எல்லாம் செலுத்தப்பட்டிருக்கிறது. இதிலே

எந்தவித மாறுபாடும் இல்லை. இதிலே இரண்டு துறைகள் சம்பந்தப்பட்டிருக்கின்ற காரணத்தினால் அதை சம்பந்தப் பட்ட மின்சார வாரியத்திடம் எடுத்துரைத்து வெகு விரைவிலே அந்த மின்சார இணைப்புப் பெற்று இந்தத் திட்டம் உடனடியாக செயலுக்குக் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

531—

வேதாரண்யம் தொகுதி, ஆயக்காரன் புலத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்தல்.

*21207—திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதி, ஆயக்காரன்புலத்தில் கால் நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால் வளத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

பதின்மூன்றாம் பட்டியல்

1—

மதுரையில் அரசு பல் மருத்துவக் கல்லூரி அமைத்தல்

வினா எண் 9363—திரு. ஒ.எஸ். அமர்நாத்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை நகரில் அரசு பல் மருத்துவக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS